# In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

O.S.No. 157/2019 தேதி- 17.03.2026
(DW.1) – ஜோஸ்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை-**

1.என்னுடைய சொத்து வழக்கு A பட்டிகை சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 5 சென்ட் ஆகும். 19.12.1978 ல் ஏற்படுத்தப்பட்ட பாக ஆவண எண்.2264/1978 அதன் படி என் பாட்டி செல்லம்மாவிற்கு கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். மேற்சொன்ன ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். அந்த ஆவணத்தின் தமிழாக்கத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.மேற்சொன்ன பாக ஆவணத்தில் 1 முதல் 4 தரப்பினர்கள் செல்லம்மாவும் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். பாக ஆவணத்தில் 5 தரப்பினர் இந்த வழக்கின் வாதியான செல்வகுமாரின் தகப்பனார் ஆபிரகாம் ஆவார் என்றால் சரியல்ல. மேற்சொன்ன பாக ஆவண எண்.2264/1978 த்தின் தமிழாக்கம் மற்றும் மலையாளம் தான் தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால் சரிதான். மேற்சொன்ன பாக ஆவணம் வா.சா.ஆ.6 ஆகும்.

3.என் பாட்டி செல்லம்மாவிற்கு சாமுவேல் நாடார் என்ற சகோதரர் உண்டு என்றால் சரிதான். சாமுவேல் நாடாருக்கு உரிமைப்பட்ட பாகச் சொத்தை ஏற்கெனவே 05.03.1973 அன்று ஆவண எண்.725/1973 விலை ஆவணமாக வாதியின் தகப்பனார் ஆபிரகாமிற்கு விலைக்கு கொடுத்துவிட்டார் என்றாலும், அதனால் தான் வாதியின் தகப்பனரான ஆபிரகாம் 5 வது தரப்பினராக மேற்சொன்ன பாக ஆவணமான வா.சா.ஆ.6 இல் சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல.

4.அதன் பிறகு 22.05.1979 அன்று வாதியின் தகப்பனார் ஆபிரகாம் என்பவர் 3 சென்ட் சொத்து ஜோதி நாடார் என்பவரிடமிருந்து ஆவண எண்.1149/1979 ன் படி விலை ஆவணத்தின் மூலம் விலைக்கு வாங்கினார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அது எங்கள் சொத்திற்கு எவ்வித சம்மந்தமும் இல்லை. ஜோதி நாடார் மேற்சொன்ன பாக ஆவணமான வா.சா.ஆ.6 ல் 2 வது தரப்பினர் என்றால் சரிதான்.

02.12.1987 ல் ஒரு செண்ட் நிலத்தை அப்பாவு நாடார் வாதியின் தகப்பனார் ஆபிரகாமிற்கு ஆவண எண்.2445/1987 ன் விலை ஆவணத்தின் படி விலைக்கு வாங்கினார் என்றாலும், அந்த அப்பாவு நாடார் மேற்சொன்ன வா.சா.ஆ.6 ஆவணத்தில் 3 வது தரப்பினராக உள்ளார் என்றால் அப்பாவு நாடாருக்கு உரிமைப்பட்ட சொத்தில் எழுதிக் கொடுத்துள்ளார்.

5.மேற்சொன்னவாறு வாதியின் தகப்பனாருக்கு 9 செண்ட் சொத்து கிடைக்கப்பெற்று, அதன் பிறகு இவ்வழக்கின் வாதிக்கு கிடைக்கப்பெற்றது ஒரே கண்டமாக அனுபவித்து வருகிறார் என்றால் இருக்கலாம். மேற்சொன்ன 9 செண்ட் சொத்தை தான் வழக்கு A பட்டிகை சொத்தாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரியல்ல.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிகாக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).